 16350

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2015**

ආර්ථික විද්‍යාව **I**
**பொருளியல் I**
Economics **I**

**21 T I**

පැය දෙකයි
**இரண்டு மணித்தியாலம்**
*Two hours*

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | 01 - 04 | |
| 02 | 05 - 13 | |
| 03 | 14 - 19 | |
| 04 | 20 - 27 | |
| 05 | 28 - 34 | |
| 06 | 35 - 43 | |
| 07 | 44 - 50 | |
| **மொத்தம்** | | |

சுட்டெண் : ...................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| | கையொப்பம் | குறியீட்டு எண் |
|---|---|---|
| 1 வது பரீட்சகர் | | |
| 2 வது பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

**அறிவுறுத்தல்கள்:**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- ※ மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணைத்** தெளிவாக எழுதுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

**1.** பின்வருவனவற்றில் சிற்றினப் பொருளியல் கூற்று எது ?
(1) கடந்த ஆண்டில் இறப்பரின் விலை 10% இனால் வீழ்ச்சியடைந்தது.
(2) கடந்த ஆண்டில் வேலையின்மை வீதமானது தொழிற்படையின் 5.8% ஆக இருந்தது.
(3) கடந்த ஆண்டில் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7% இனால் அதிகரித்தது.
(4) கடந்த ஆண்டில் பொதுவிலை மட்டமானது 4% இனால் அதிகரித்தது.
(5) கடந்த ஆண்டில் அரசாங்கத்தின் வரிவருவாய் 8% இனால் வீழ்ச்சியடைந்தது.
(.........)

**2.** பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற்கொள்ளும் மூன்று முக்கிய குழுக்களாவன,
(1) வீட்டுத்துறையினர், வியாபார நிறுவனங்கள் மற்றும் வங்கிகளாகும்.
(2) வீட்டுத்துறையினர், வியாபார நிறுவனங்கள் மற்றும் அரசாங்கமாகும்.
(3) வியாபார நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாகும்.
(4) வியாபார நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களாவர்.
(5) வீட்டுத்துறையினர், அரசாங்கம் மற்றும் வங்கிகளாகும்.
(.........)

**3.** குறித்த ஒரு நடவடிக்கையின் அமையச் செலவானது
(1) அக்குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளும் அனைவருக்கும் சமமானதாக இருக்கும்.
(2) அந்நடவடிக்கையின் பணச்செலவு மற்றும் தியாகம் செய்யப்பட்ட வருமானம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.
(3) அந்நடவடிக்கையின் பணச் செலவை மட்டும் உள்ளடக்கும்.
(4) அந்நடவடிக்கையினால் தியாகம் செய்யப்பட்ட வருமானங்களை மட்டும் உள்ளடக்கும்.
(5) அந்நடவடிக்கையின் நேரடி நன்மைகளை மட்டும் அளவிடுகிறது.
(.........)

**4.** நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையின் வழியே
(1) தொழினுட்ப மட்டமானது மாற்றமடையும்.
(2) ஒரு பொருளின் அதிக அளவினை மற்றொரு பொருளின் உற்பத்தியை விட்டுக்கொடுக்காமல் உற்பத்தி செய்ய முடியும்.
(3) உற்பத்தி வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை.
(4) கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
(5) பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறனின்மை நிலவுகிறது.
(.........)

[பக். 2 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**5.** வளங்கள் சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒன்றுக்கொன்று பூரண பதிலீடாகக் காணப்படுமாயின் பின்வருவனற்றில் எது உண்மையாகும் ?
(1) சகல பொருள்களினதும் வெளியீட்டை அதிகரிக்க முடியும்.
(2) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர் கோடாகும்.
(3) சிறப்புத் தேர்ச்சியும் பரஸ்பர நன்மைதரும் வர்த்தகமும் உருவாகச் சாத்தியமில்லை.
(4) எந்த ஒரு நாடோ அல்லது நபரோ எந்தவொரு நடவடிக்கையிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்க முடியாது.
(5) வளங்களின் அருமைத்தன்மை இல்லாமற் போய்விடும். (.........)

**6.** பின்வருவனவற்றுள் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றின் **பண்பல்லாதது** எது ?
(1) கேள்வி, நிரம்பலை அடிப்படையாகக் கொண்ட விலைப்பொறிமுறை
(2) தனியார் சொத்துரிமை முறை
(3) சுய கரிசனையுடன் செயற்படும் வீட்டுத்துறையினரும் முயற்சியாளர்களும்
(4) சுதந்திரமான முயற்சியாண்மை
(5) மத்திய திட்டமிடல் முறைமை (.........)

More Past Papers at
tamilguru.lk

**7.** பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்குபற்றலினளவு அதிகளவில் காணப்படுவது,
(1) சந்தைப் பொருளாதாரமொன்றிலாகும்.
(2) கட்டளைப் பொருளாதாரமொன்றிலாகும்.
(3) கலப்புப் பொருளாதாரமொன்றிலாகும்.
(4) சமூகச் சந்தைப் பொருளாதாரமொன்றிலாகும் (Social market economy).
(5) மரபுரீதியான பொருளாதாரமொன்றிலாகும். (.........)

**8.** நபரொருவரின் வருமானம் அதிகரிக்கும்போது பால்மாவுக்கான கேள்வியும் அதிகரிக்குமாயின், பால்மாவானது
(1) இழிவுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (2) பொருளாதாரமல்லாப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(3) கிபன் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (4) பொதுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(5) சாதாரண பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (.........)

**9.** தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு போட்டிச் சந்தையில் 'சாதாரண பொருளொன்றின்' கேள்வி அதிகரிக்க நிரம்பல் வீழ்ச்சியடையுமாயின்,
(1) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை ஆகிய இரண்டும் அதிகரிக்கும்.
(3) சமநிலைத் தொகை அதிகரிக்கும்; சமநிலை விலை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(4) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(5) சமநிலை விலை அதிகரிக்கும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம், வீழ்ச்சியடையலாம் அல்லது மாறாதிருக்கலாம். (.........)

**10.** சீனியும் கருப்பட்டியும் நுகர்வு நடவடிக்கைகள் பலவற்றில் ஒன்றுக்கொன்று பதிலீடாகக் கருதப்படும். எனவே, சீனியின் விலை அதிகரிக்கும்போது,
(1) கருப்பட்டிக்கான கேள்வி அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.
(2) கருப்பட்டிக்கான கேள்வி குறையும் என எதிர்பார்க்கலாம்.
(3) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(4) கருப்பட்டியின் விலை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(5) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். (.........)

**11.** தேங்காய்களுக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி $-1.0$ எனக் கருதுக. இந்நிலைமையில் தேங்காயொன்றின் விலை ரூபா 60 ஆகவுள்ளபோது கேள்வித் தொகையானது 500 தேங்காய்களாகும். கேள்வித் தொகை 600 தேங்காய்களாயின், தேங்காயொன்றின் விலை என்னவாக இருக்கும் ?
(1) ரூபா 30 (2) ரூபா 40 (3) ரூபா 50 (4) ரூபா 55 (5) ரூபா 60 (.........)

**12.** பின்வருவனவற்றுள் பொருளொன்றின் கேள்வி வளையியின் இடப்புற நகர்வுக்குக் காரணமாவது எது ?
(1) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(2) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(3) இணைப்புப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(4) பதிலீட்டுப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(5) எதிர்காலத்தில் விலை வீழ்ச்சியடையலாம் என்னும் எதிர்பார்க்கை. (.........)

**13.** பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையி கீழ்நோக்கிய சரிவுள்ளதாயும் சந்தை நிரம்பல் வளையி மேல்நோக்கிய சரிவுள்ளதாயும் காணப்படும்போது உள்ளீடுகளின் விலைகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது,
(1) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை அதிகரிக்கச் செய்யும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை வீழ்ச்சியடையச் செய்யும்.
(3) நிரம்பல் வளையியை இடப்புறம் நகரச் செய்யும்.
(4) சமநிலை விலையை வீழ்ச்சியடையச் செய்வதுடன் சமநிலைத் தொகையை அதிகரிக்கச் செய்யும்.
(5) சமநிலை விலையை அதிகரிக்கச் செய்வதுடன் சமநிலைத் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும். (.........)

[பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at
tamilguru.lk

**14.** சிறிய நாடொன்றில் சீனிக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

$Q_d = 320 - 3P$ (கேள்வி)

$Q_s = -80 + 2P$ (நிரம்பல்)


அத்துடன் அந்நாட்டின் சீனிக்கான சந்தை சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்படுவதாகவும் சீனியின் உலக விலை அலகொன்று ரூபா 60 எனவும் கருதுக. நாடு சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்பட்டபின் சந்தைக்கு உள்நாட்டிலிருந்து நிரம்பல் செய்யப்படும் சீனியின் அளவு யாது ?

(1) 40 அலகுகள் (2) 60 அலகுகள் (3) 80 அலகுகள்
(4) 100 அலகுகள் (5) 140 அலகுகள் (.........)

**15.** பெற்றோலுக்கான கேள்வி மிகவும் நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் மிகவும் நெகிழ்வுள்ளதாகவும் இருப்பதாகக் கருதுக. இந்நிலைமையில் பெற்றோல் மீது விதிக்கப்படும் ஓர் உற்பத்தி வரியானது,

(1) கொள்வனவாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(2) விற்பனையாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(3) கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர் மீது சமமான சுமையினை ஏற்படுத்தும்.
(4) வரிசெலுத்துவோர் மீது முழுமையான சுமையினை ஏற்படுத்தும்.
(5) கொள்வனவாளர் மீதோ விற்பனையாளர் மீதோ சுமையினை ஏற்படுத்தாது. (.........)

**16.** பின்வரும் வரைபு விவசாயப் பொருளொன்றுக்கான போட்டிச் சந்தையில் கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.




அரசாங்கம் இப்பொருளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் உற்பத்தியாளருக்கு, உற்பத்தி அலகொன்றுக்கு ரூபா 2 மானியம் வழங்கத் தீர்மானிக்கிறது. மானியத்தின் பின்னரான நுகர்வோன் மிகை,

(1) ரூ. 20 ஆகும். (2) ரூ. 80 ஆகும். (3) ரூ. 90 ஆகும்.
(4) ரூ. 160 ஆகும். (5) ரூ. 180 ஆகும். (.........)

**17.** சந்தைச் சமநிலை விலையை விடக் குறைந்த ஓர் உச்ச விலையை நிர்ணயித்து விதிக்கப்படும் உச்ச விலைக் கொள்கையின் விளைவானது, சந்தையில்

(1) மிகை நிரம்பலை ஏற்படுத்தும். (2) மிகைக் கேள்வியை ஏற்படுத்தும்.
(3) சமநிலை விலையை ஏற்படுத்தும். (4) நிரம்பலில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
(5) கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். (.........)

**18.** உற்பத்திச் செயன்முறையில் ஒரு குறுங்காலம் என்பது,

(1) நிறுவனம் மேலதிகமாக வேலையாட்களை பணிக்கமர்த்த முடியாத காலப்பகுதியாகும்.
(2) உற்பத்தி செய்யப்படும் வெளியீட்டின் அளவு நிலையாகவுள்ள காலப்பகுதியாகும்.
(3) பெரும்பாலான உள்ளீடுகளுக்கு பற்றாக்குறை நிலவும் காலப்பகுதியாகும்.
(4) எல்லா உள்ளீடுகளும் நிலையாக இருந்தாலும் வெளியீட்டை மாற்றியமைக்கக்கூடிய காலப்பகுதியாகும்.
(5) சில உள்ளீடுகளின் அளவுகள் நிலையாகவுள்ளபோது ஏனைய உள்ளீடுகளின் அளவுகளை மாற்றியமைக்கக் கூடிய காலப்பகுதியாகும். (.........)


**19.** மொத்தச் செலவு (TC) மற்றும் மொத்த மாறும் செலவு (TVC) வளையிகளுக்கு இடையிலான நிலைக்குத்து இடைவெளியானது

(1) வெளியீடு வீழ்ச்சியடையும்போது குறைவடையும்.
(2) வெளியீடு வீழ்ச்சியடையும்போது அதிகரிக்கும்.
(3) எல்லைச் செலவுக்குச் (MC) சமனாகும்.
(4) மொத்த நிலையான செலவுக்குச் (TFC) சமனாகும்.
(5) சராசரி நிலையான செலவுக்குச் (AFC) சமனாகும். (.........)

[பக். 4 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**20.** வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு செலவு மற்றும் கேள்வி வளையிகளை எதிர்நோக்கும் போட்டி உற்பத்தி நிறுவனமொன்று தனது வெளியீட்டை $Q_1$ இலிருந்து $Q_2$ ஆக அதிகரிக்குமாயின்,




(1) சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(2) இலாபத்தில் ஓர் அதிகரிப்பினை அனுபவிக்கும்.
(3) இலாபத்தில் ஒரு வீழ்ச்சியினை அனுபவிக்கும்.
(4) வருவாய்கள் அதிகரித்தாலும் செலவுகள் அதிகரிக்காது.
(5) செலவுகள் அதிகரித்தாலும் வருவாய்கள் அதிகரிக்காது.

(………)

**21.** பின்வருவனவற்றில் தனியுரிமை போட்டிச் சந்தைகளின் **பண்பல்லாதது** எது ?
(1) ஒப்பீட்டளவில் இலகுவாக சந்தையில் உட்பிரவேசிக்கும் தன்மை
(2) வேறாக்கம் செய்யப்பட்ட பொருட்கள் காணப்படல்
(3) பொருளுக்கு குறிப்பிடத்தக்க அளவு விளம்பரம் காணப்படல்
(4) கொள்வனவாளரும் விற்பனையாளரும் அதிக எண்ணிக்கையில் காணப்படல்
(5) நிறுவனங்கள் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையிகளை எதிர்கொள்ளல் (………)

**22.** பின்வருவனவற்றுள் பொருளாதாரமொன்றின் வருமானச் சுற்றோட்ட வரைபடத்தில் அரசாங்கத்திடமிருந்து நேரடியாக இடம்பெறும் பாய்ச்சலாக அமைவது எது ?
(1) வரிகள் (T)
(2) ஏற்றுமதிகள் (X)
(3) சேமிப்புகள் (S)
(4) மாற்றல் செலுத்தல்கள் (Tr.)
(5) முதலீட்டுச் செலவுகள் (I) (………)

**23.** வர்த்தகச் சகடோட்டமொன்று வீழ்ச்சியடையும் கட்டத்தில்
(1) முதலீடு அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்.
(2) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்.
(3) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் விலைமட்டம் அதிகரிக்கும்.
(4) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் வெளியீடு அதிகரிக்கும்.
(5) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடும் அதிகரிக்கும். (………)

More Past Papers at
tamilguru.lk

**24.** தற்போது இலங்கையின் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் மிகப் பெரிய கூறாகவுள்ளது
(1) இயந்திர சாதனங்களும் உபகரணங்களுமாகும்.
(2) நிதிச் சொத்துக்களாகும்.
(3) பெருந்தோட்ட அபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தியாகும்.
(4) கையிருப்பு மாற்றங்களாகும்.
(5) கட்டடவாக்கமாகும். (………)

**25.** செலவீட்டு வழியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிட
(1) கூலிகள், இலாபங்கள், அரசாங்க கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதிகள் என்பவற்றைக் கூட்ட வேண்டும்.
(2) கூலிகள், வாடகைகள், வட்டி மற்றும் இலாபங்களைக் கூட்ட வேண்டும்.
(3) நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் ஏற்றுமதிகளைக் கூட்ட வேண்டும்.
(4) நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதிகளைக் கூட்ட வேண்டும்.
(5) நுகர்வு, அரசாங்கக் கொள்வனவுகள், வரிகள் மற்றும் வட்டி வருவாய்களைக் கூட்ட வேண்டும். (………)

**26.** தற்போது இலங்கையின் நடைமுறைச் சந்தை விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி அண்ணளவாக
(1) 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(2) 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(3) 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(4) 125 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(5) 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். (………)


**27.** சமநிலை தேசிய வருமான மட்டத்தில் இயங்கும் பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளியல் தரவுகளைக் கருத்திற் கொள்க.

| வகை | ரூபா மில்லியன் | வகை | ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| நுகர்வுச் செலவு | 5 000 | இறக்குமதிகள் | 1 200 |
| வரி வருவாய் | 1 000 | ஏற்றுமதிகள் | 980 |
| அரசாங்கக் கொள்வனவு | 1 500 | சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 8 000 |

இப்பொருளாதாரத்தில் முதலீட்டு மட்டத்தின் அளவு
(1) ரூபா 310 மில்லியன் ஆகும்.
(2) ரூபா 320 மில்லியன் ஆகும்.
(3) ரூபா 1 220 மில்லியன் ஆகும்.
(4) ரூபா 1 720 மில்லியன் ஆகும்.
(5) ரூபா 1 940 மில்லியன் ஆகும். (………)

[பக். 5 ஐப் பார்க்க

**28.**




More Past Papers at
tamilguru.lk

மேலுள்ள வரைபடம் நேர்கோட்டு நுகர்வு வளையியொன்றைக் காட்டுகிறது.
தன்னிச்சையான நுகர்வு ரூபா 4 000 ஆயின், வளையியின் மீதுள்ள $B$ புள்ளியில் மொத்த நுகர்வுச் செலவு யாது ?
(1) ரூபா 18 000 ஆகும். (2) ரூபா 17 000 ஆகும். (3) ரூபா 16 000 ஆகும்.
(4) ரூபா 14 000 ஆகும். (5) ரூபா 10 000 ஆகும். (.........)

**29.** மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்போது இடம்பெறுமென பொருளியலாளர்கள் கருதுவது
(1) ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும்.
(2) இறக்குமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும்.
(3) தேறிய ஏற்றுமதிகள் நிலையாக இருக்கும் என்பதாகும்.
(4) தேறிய ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும்.
(5) தேறிய ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும். (.........)

**30.** எதிர்பாராதவகையிலான உயர்மட்டப் பணவீக்க விலை அதிகரிப்பு ஏற்படும்போது அதன் மூலம் பெரும்பாலும் நன்மையடையும் குழு பின்வருவனவற்றுள் எது ?
(1) ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்கள்
(2) கடன் வழங்குநர்கள்
(3) சம்பளம் உழைப்போர்
(4) தாம் வேலைசெய்த காலத்தில் பணத்தைச் சேமித்து வைத்துள்ள தற்போது வயது முதிர்ந்த நபர்கள்
(5) கடன்பெற்றோர் (.........)

**31.** பொருளாதாரமொன்று நிறைதொழில் மட்டத்தில் உள்ளபோது பின்வருவனவற்றுள் எது கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடும் ?
(1) பாதீட்டுக் குறைநிலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) தேறிய ஏற்றுமதிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(3) தொழிற்சங்கங்களின் பலத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(4) மெய் வட்டி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) பணநிரம்பலில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (.........)

**32.** ஒரு வருட காலப்பகுதியில் நாடொன்றின் பணவீக்க வீதம் 12% ஆகும். அதே காலப்பகுதியில் பெயரளவு மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி 14% ஆகும். இக்குறிப்பிட்ட ஒரு வருட காலப்பகுதியில் நிகழ்ந்ததை பின்வருவனவற்றுள் எக்கூற்றுச் சரியாக விவரிக்கிறது ?
(1) பணநிரம்பல் 2% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.
(2) பணநிரம்பல் 2% இனால் அதிகரித்துள்ளது.
(3) மெய் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது.
(4) மெய் மொத்தத் தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.
(5) பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் அதிகரித்துள்ளது. (.........)

**33.** 'அண்மிய பணம்' என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது,
(1) மூலதனப் பெறுமதிகள் அதிகளவில் தளம்பலுக்கு உட்படுவதனால் பணமாகக் கருதப்படமுடியாத நிதிச் சொத்துக்களாகும்.
(2) பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் அதேவேளை பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
(3) பெறுமானத்திரட்டாகத் தொழிற்படும் அதேவேளை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
(4) கேள்வி வைப்புகள் மீது வரையப்படும் காசோலைகளாகும்.
(5) கடன் அட்டைகளாகும். (.........)

**34.** தற்போது இலங்கையின் $M_4$ பணத்திரட்டின் மிகப் பெரிய கூறாக அமைவது
(1) பொதுமக்கள் வசமுள்ள நாணயம்
(2) பொதுமக்கள் பெயரிலுள்ள கேள்வி வைப்புகள்
(3) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
(4) வணிக வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
(5) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம் (.........)

[பக். 6 ஐப் பார்க்க

**35.** வணிக வங்கி முறைமையொன்றிலுள்ள வங்கிகள் தமது வைப்புகளில் 20% இனை காசொதுக்காகப் பேணுவதாகவும் இதில் ஒரு வங்கி ரூபா 200 மில்லியன் புதிய காசு வைப்பினை பெற்றுக்கொள்வதாகவும் கருதுக. புழக்கத்திலுள்ள பணத்தினளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாவிடின், புதிய வைப்பின் மூலம் வங்கி முறை உருவாக்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது ?
(1) ரூபா 160 மில்லியன் ஆகும். (2) ரூபா 200 மில்லியன் ஆகும். (3) ரூபா 800 மில்லியன் ஆகும்.
(4) ரூபா 1 000 மில்லியன் ஆகும். (5) ரூபா 1 200 மில்லியன் ஆகும். (.........)

**36.** மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் அரச பிணையங்களின் ஒரு திறந்த சந்தை விற்பனையின் விளைவாக பின்வருவனவற்றுள் எது ஏற்படலாமென எதிர்பார்க்கலாம் ?
(1) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பு
(2) கடன்கள் மீது அறவிடப்படும் வட்டி வீதங்கள் அதிகரிப்பு
(3) வங்கிகளால் வழங்கப்படும் கடன்களின் அளவு அதிகரிப்பு
(4) தனியார் முதலீட்டுச் செலவினங்கள் அதிகரிப்பு
(5) பணநிரம்பல் அதிகரிப்பு (.........)

More Past Papers at
tamilguru.lk

**37.** பின்வருவனவற்றுள் சந்தைத் தோல்வியைச் **சுட்டிக்காட்டாதது** எது ?
(1) தனியுரிமைகள் நிலவுதல்
(2) வளி மற்றும் நீர் அதிகளவில் மாசடைதல்
(3) தேசிய பாதுகாப்பு போன்ற அத்தியாவசிய சேவைகள் போதியளவில் நிரம்பல் செய்யப்படாமை
(4) பொதுப் பொருள்கள் போதியளவு காணப்படல்
(5) சமமற்ற வருமானப் பரம்பல் (.........)

**38.** நிறுவனமொன்று தனது உற்பத்தியின் போதேற்படும் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளாதாயின் போட்டிச் சந்தை சமநிலை வெளியீட்டின்போது பின்வருவனவற்றில் எது உண்மையாகும் ?
(1) விலையானது எல்லைச் சமூகச் செலவினை விட உயர்வாகும்.
(2) விலையானது எல்லைச் சமூகச் செலவை விடக் குறைவாக இருக்கும்.
(3) விலையானது எல்லைச் சமூகச் செலவுக்குச் சமனாகும்.
(4) எல்லை தனியார் செலவு, எல்லைச் சமூகச் செலவுக்கு சமனாகும்.
(5) எல்லை தனியார் செலவு, எல்லை சமூகச் செலவை விட உயர்வாகும். (.........)

**39.** ஒரு தூய பொதுப் பொருளானது
(1) சந்தைகளால் வினைத்திறனான வகையில் வழங்கப்படும்.
(2) நுகர்வில் போட்டித் தன்மை வாய்ந்ததாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.
(3) நுகர்வில் போட்டித் தன்மை அற்றதாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.
(4) நுகர்வில் போட்டித் தன்மை வாய்ந்ததாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படமுடியாததாகவும் இருக்கும்.
(5) நுகர்வில் போட்டித் தன்மை அற்றதாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படமுடியாததாகவும் இருக்கும். (.........)

**40.** இறைக் கொள்கையானது அரசாங்கம் பின்வருவனவற்றுள் எதனை நிர்ணயிப்பதுடன் தொடர்புடையது ?
(1) சந்தை வட்டி வீதங்கள் (2) பணநிரம்பல் வளர்ச்சி வீதம்
(3) வரிவிதிப்பும் அரசாங்க செலவீட்டு மட்டங்களும் (4) பணநிரம்பல்
(5) பணவீக்க வீதம் (.........)

**41.** தற்போது இலங்கை அரசாங்கத்தின் தனியொரு பெரிய வரி வருவாய் மூலாதாரமாக அமைவது
(1) பெறுமதி சேர் வரி (2) கம்பனி வருமான வரிகள்
(3) உற்பத்தி மீதான வரிகள் (4) இறக்குமதி வரி
(5) உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) (.........)

**42.** பின்வருவனவற்றுள் நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு நன்மையின் பிரதான காரணம் **அல்லாதது** எது ?
(1) தலைக்குரிய வருமானம் (2) காலநிலை
(3) ஊழியப் படையின் திறன்கள் (4) ஊழியர் ஒருவருக்கான மூலதனத்தின் அளவு
(5) புவியியல் இடஅமைவு (.........)

**43.** A மற்றும் B ஆகிய நாடுகளில் ஓர் அலகு வளச் சேர்க்கையினைக் கொண்டு உற்பத்திசெய்யப்படக்கூடிய ஈருருளிகள் மற்றும் உழவு இயந்திரங்களின் அளவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| பொருள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| உழவு இயந்திரம் | 20 | 2 |
| ஈருருளி | 60 | 10 |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளில் சிறக்குமியல்பு அடைவதாகக் கொள்க. இங்கு பரஸ்பரம் நன்மையளிக்கும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் உழவு இயந்திரங்கள் மற்றும் ஈருருளிகள் இடையிலான பரிமாற்ற விகிதம்
(1) ஓர் உழவு இயந்திரத்திற்கு 3 ஈருருளிகளை விடக் குறைவாக இருக்க வேண்டும்.
(2) ஓர் உழவு இயந்திரத்திற்கு 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(3) ஓர் உழவு இயந்திரத்திற்கு 2 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(4) ஓர் உழவு இயந்திரத்திற்கு 6 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(5) ஓர் உழவு இயந்திரத்திற்கு 10 இற்கு மேற்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும். (.........)

[பக். 7 ஐப் பார்க்க

**44.** நாடொன்றின் வர்த்தகமாற்று விகிதத்தில் வீழ்ச்சி நிலைமையை ஏற்படுத்தவல்ல ஒரேயொரு விலைமாற்றச் சேர்க்கை பின்வருவனவற்றுள் எது ?

| | ஏற்றுமதிகளின் சராசரி விலை | இறக்குமதிகளின் சராசரி விலை |
|---|---|---|
| (1) | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| (2) | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| (3) | அதிகரிப்பு | வீழ்ச்சி |
| (4) | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| (5) | மாறாது | வீழ்ச்சி |

More Past Papers at
tamilguru.lk

(.........)

**45.** நெகிழும் நாணய மாற்றுவீத முறையின்கீழ் பின்வருவனவற்றுள் எது ஐக்கிய அமெரிக்க டொலரின் ரூபாய் விலையினை அதிகரிக்கச் செய்யும் ?
(1) ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்க வீதம் இலங்கையை விட உயர்வாக இருத்தல்
(2) ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமான அதிகரிப்பு இலங்கையை விட உயர்வாக இருத்தல்
(3) இலங்கை உடுபுடைவைகள் மீதான ஐக்கிய அமெரிக்க பிரசைகளின் விருப்பம் அதிகரித்தல்
(4) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குள் வரும் இறக்குமதிகளில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி
(5) மெய் வட்டி வீத அதிகரிப்பானது அமெரிக்காவில் இலங்கையை விட உயர்வாக இருத்தல் (.........)

**46.** பொருளாதார வளர்ச்சி வீதம் பொதுவாக அளவிடப்படுவது,
(1) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(2) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(3) தலைக்குரிய பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(4) தலைக்குரிய செலவிடத்தக்க தேசிய வருமானத்தில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(5) தலைக்குரிய கொள்வனவு சக்தி சமமதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(.........)

**47.** கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் வேலையற்றிருப்போராக வகைப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 50 000 ஆகவும் தொழில்புரிவோராக வகைப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 450 000 ஆகவும் இருப்பின் அப்பொருளாதாரத்தின் வேலையின்மை வீதம்
(1) 11.1% ஆகும். (2) 10.0% ஆகும். (3) 9.2% ஆகும.
(4) 8.0% ஆகும். (5) 7.4% ஆகும். (.........)

**48.** குறித்த நாடொன்றில் கடந்த 10 வருட காலப்பகுதியில் வருமானப் பங்கீட்டின் கினி குணகமானது 0.45 இலிருந்து 0.65 ஆக உயர்ந்துள்ளது. பின்வருவனவற்றுள் இம்மாற்றத்திற்கான காரணமாக அமையவல்லது எது ?
(1) காரணிச் சந்தை மற்றும் பொருள் சந்தைகளில் சந்தைச் சக்தி அதிகரித்தமை
(2) ஊழியச் சந்தையின் பாகுபாடுகள் (discrimination) நீக்கப்பட்டமை
(3) செல்வம் மற்றும் சொத்துக்களின் பங்கீடு ஒப்புரவு வாய்ந்ததாக மாறியமை
(4) வயது வந்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் உயர்தரத்தில் சித்தி பெற்றிருத்தல்
(5) வரிமுறையானது மிகவும் விருத்திமுறைத் தன்மை வாய்ந்ததாக மாறியமை (.........)

**49.** பின்வருவனவற்றுள் எது நாடொன்றின் வருமானப் பங்கீட்டுச் சமமின்மையை பெரும்பாலும் குறைக்கக் கூடும் ?
(1) சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) குறைந்த திறன் கொண்ட ஊழியர்களுக்கான சேவைக்காலத் தொழிற்பயிற்சி
(3) பாதீட்டுக் குறைநிலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) தொழிலற்ற வேலையாட்களைப் பயிற்றுவிப்பதற்கான நிதிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) ஓர் ஒடுங்குமுறை வரியை விதித்தல்
(.........)

**50.** கடந்த சில தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளில் ஏற்பட்ட துரித அதிகரிப்புக்கு முதன்மைக் காரணியாக அமைவது
(1) நாடுகள் பலவற்றில் தீர்வையல்லாத் தடைகள் நீக்கப்பட்டமை
(2) நாடுகள் பலவற்றில் பாதுகாப்புவாதத்தின் மீது ஏற்பட்ட அதிகரித்த ஆர்வம்
(3) உலகில் துரிதமாக வீழ்ச்சியடைந்த போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் செலவுகள்
(4) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கூலிமட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி
(5) பெரும்பாலான நாடுகளில் அரசியல் அதிகாரம் மத்திய திட்டமிடலிலிருந்து விலகிச் சென்றமை (.........)

* * *

16350

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

ආර්ථික විද්‍යාව II
பொருளியல் II
Economics II

21 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ உப பிரிவு **'அ'**, உப பிரிவு **'ஆ'** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ வரைபுத் தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து குறைந்தது **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**1.** (i) உதாரணங்களைப் பயன்படுத்தி ஓர் இலவசப் பொருளுக்கும் ஒரு பொருளாதாரப் பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) அமையச் செலவு எண்ணக்கருவை விளக்கி, அருமைப் பிரச்சினையுடன் அமையச் செலவு எவ்வாறு தொடர்புபடுகிறதென்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிகழ்கால நுகர்வை குறைத்துக் கொள்ளத் தயாராயுள்ள நாடுகளின் பொருளாதாரங்கள், துரித வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியுமென்பதை உற்பத்தி இயல்தகவு வளையிகளைப் பயன்படுத்தி விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஓர் உற்பத்தி இயல்தகவு எல்லையின் மீதுள்ள சகல புள்ளிகளும் பொருளாதார வினைத்திறன் தொடர்பில் சமமானவையா ? உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரங்கள் கட்டாயம் முதலாளித்துவப் பொருளாதாரங்களாகவும், கட்டளைப் பொருளாதாரங்கள் கட்டாயம் சோஷலிசப் பொருளாதாரங்களாகவும் இருக்குமா ? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

**2.** (i) சந்தை நிரம்பல் வளையியொன்றை வரையும்போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும் 'கேள்வி விதியினை' எவ்வாறு விளக்குகின்றன என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் வேறுபடுத்தி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(iv) நிரம்பல் நெகிழ்வற்றதாக இருக்குமாயின் உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் சிறப்பு (அலகு) வரியின் சுமையின் பெரும் பகுதியினை யார் செலுத்துவார் ? பொருத்தமான வரைபொன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$Q_d = 100 - 4P$ (கேள்வி)  $Q_s = -30 + 6P$ (நிரம்பல்)

(அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபொன்றில் சரியாக வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைச் சமநிலையின்போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபிற் காட்டுக. (02 புள்ளிகள்)

**3.** (i) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து வெளிப்படையான (நேர்) செலவுகளையும் உட்கிடையான (நேரில்) செலவுகளையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருளியலாளர்கள் சாதாரண இலாபத்தை ஒரு செலவாகக் கருதுவதேன் ? (04 புள்ளிகள்)

(iii) **நால்வகைச்** சந்தை அமைப்புகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனை என்ன ? விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் இந்நிபந்தனை எவ்வாறு அமையும் ? (04 புள்ளிகள்)

(v) தரப்பட்ட குறுகிய காலமொன்றில் விலையை ஏற்கும் உற்பத்தி நிறுவனமொன்று 20 அலகுகளை உற்பத்தி செய்வதாகக் கருதுக. அதன் வெளியீட்டலகொன்றின் சந்தை விலை ரூபா 50 ஆகும். 20 அலகு வெளியீட்டில் சராசரி மொத்தச் செலவு ரூபா 60 ஆகவும் சராசரி மாறுஞ்செலவு ரூபா 40 ஆகவும் உள்ளன.

(அ) இந்த குறுகிய காலப்பகுதியில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு எவ்வளவு ? (02 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**4.** (i) ஒரு நாட்டின் கூட்டு மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடப் பயன்படும் **மூன்று** அணுகுமுறைகளும் எவை ? அவை மொத்தப் பொருளாதார செயன்முறை தொடர்பில் ஒரே பெறுமதியினைத் தருவதேன் ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் தேசிய சேமிப்பின் பிரதான மூலாதாரங்கள் எவை ? (04 புள்ளிகள்)

(iii) தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் எவ்வழிகளில் பயன்படுகின்றன ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுவதாகக் கொள்க. (சகல புள்ளிவிபரங்களும் ரூபா மில்லியன்களில்)

| வகை | பெறுமதி | வகை | பெறுமதி |
|---|---|---|---|
| மொத்த தனியார் உள்நாட்டு முதலீடு | 70 | அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் | 25 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 50 | அரசாங்கம் வீட்டுத்துறையினருக்கு வழங்கும் வட்டிச் செலுத்தல்கள் | 15 |
| சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 400 | வெளிநாட்டிலிருந்தான காரணி வருவாய்கள் | 7 |
| சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதி | -25 | வெளிநாட்டிற்குச் செலுத்தப்படும் காரணி வருவாய் செலுத்தல்கள் | 12 |
| வரிகள் | 100 | தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள் | 10 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) தேறிய ஏற்றுமதிகள் (02 புள்ளிகள்)

(ஆ) தனியார் நுகர்வுச் செலவீடு (02 புள்ளிகள்)

(இ) செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானம் (02 புள்ளிகள்)

(ஈ) அரச சேமிப்புகள் (02 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

**5.** (i) பின்வரும் மொத்த நுகர்வுச் சார்பினைக் கருத்திற் கொள்க.

$$C = a + bY_d$$

இச்சமன்பாட்டில் C என்பது மொத்த நுகர்வுச் செலவீட்டையும் $Y_d$ என்பது செலவிடத்தக்க தேசிய வருமான மட்டத்தையும் குறிக்கும். **a** மற்றும் **b** ஆகிய குணகங்கள் பற்றி நீர் எவ்வாறு கருத்துரைப்பீரென விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்பதனாற் கருதப்படுவதென்ன ? திறந்த பொருளாதாரமொன்றின் தேசிய வருமானச் சமநிலை மட்டத்தை அடையத் தேவையான நிபந்தனைகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மூடிய பொருளாதாரமொன்றில் திட்டமிட்ட சேமிப்புகள் திட்டமிட்ட முதலீட்டை விஞ்சியுள்ளதாகக் கருதுக. இவ்வாறான நிலைமையில் இப்பொருளாதாரம் எவ்வாறு சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை அடையுமென விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்பட்டுள்ளன. (சகல தரவுகளும் ரூபா மில்லியன்களில்)

| | | |
|---|---|---|
| நுகர்வு (C) | = | 50 + 0.8 Yd |
| முதலீடு (I) | = | 120 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | = | 100 |
| வரிகள் (T) | = | 80 |
| அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் (Tr.) | = | 55 |

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கக் கொள்வனவுகள் ரூபா 200 மில்லியன் ஆக அதிகரிக்குமாயின், புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்ன ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது ? (02 புள்ளிகள்)

(ஈ) அரசாங்கம் ரூபா 2 000 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளதாயின் அதற்கெனத் தேவைப்படும் மொத்த அரசாங்கக் கொள்வனவுகள் எவ்வளவாக இருக்க வேண்டும் ? (02 புள்ளிகள்)

## உப பிரிவு ‘ஆ’

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரு** வினாக்களைத் தெரிவுசெய்க.)

**6.** (i) ‘பணம்’ என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, பண்டமாற்று முறையின் குறைபாடுகளை பணம் எவ்வாறு நிவர்த்தி செய்ததெனச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கடன் அட்டைகள் பணமாகக் **கருதப்படாதது** ஏன் என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றில் பணத்திற்கான கேள்வியை நிர்ணயிக்கும் பேரினப் பொருளியல் மாறிகளைப் பட்டியற்படுத்தி, இம்மாறிகள் பணத்திற்கான கேள்வியை எவ்வாறு பாதிக்குமென்பதைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) கேள்வித்தூண்டல் பணவீக்கத்தையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர் ? அவசியமான வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) தற்போது இலங்கையின் உள்நாட்டுப் பணச்சந்தையில் அதி உயர்மட்டத்திலான மிகைத் திரவத்தன்மை நிலவுவதேன் ? வங்கி முறைமையின் மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ? (06 புள்ளிகள்)

**7.** (i) ‘தூய பொதுப் பொருள்களையும்’, ‘மேன்மைப் பொருள்களையும்’ வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருள்களின் உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் காணப்படுகையில் சந்தை முறையானது வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்ய முடியாமற் போவது எவ்வாறு என்பதனை பொருத்தமானதொரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) விகிதசம வரி, விருத்திமுறை வரி, ஒடுங்குமுறை வரி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iv) ‘வரியின் மிகைச் சுமை’ (excess burden of taxation) என்பதனாற் கருதப்படுவதென்ன ? பொருளொன்றின் உற்பத்தியாளர் மீது அலகு வரியொன்று விதிக்கப்படும்போது ஏற்படும் வரியின் மிகைச் சுமையினை வரைபடமொன்றின் மூலம் காட்டுக. (05 புள்ளிகள்)

(v) “அரசாங்க வருவாயுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொதுப் படுகடன் நிலை மிகக் கவலைக்கிடமானதாகத் தோன்றுகிறது.” இக்கூற்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

**8.** (i) சர்வதேச வர்த்தகத்தின் மூலம் நாடுகள் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வர்த்தகப் பாதுகாப்புவாதத்துக்குச் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரதான பொருளியல் வாதங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் சர்வதேச போட்டித்தன்மையை நிர்ணயிக்கும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியிலான பொருளாதாரமொன்றின் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பரிமாற்றல்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளது. (சகல இலக்கங்களும் ரூபா மில்லியனில்)

| வகை | பெறுகைகள் | செலுத்தல்கள் | வகை | பெறுகைகள் | செலுத்தல்கள் |
|---|---|---|---|---|---|
| வணிகப் பொருள்கள் | 800 | 1 200 | கடற் போக்குவரத்து | 180 | 150 |
| ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் | 5 | 10 | வட்டி வருவாய்கள் | - | 35 |
| நிதிச் சேவைகள் | 25 | 30 | தொழிலாளர் பணவனுப்பல்கள் | 285 | 50 |
| பங்கிலாபங்கள் | 10 | 70 | பயணம் | 140 | 100 |
| விமானப் போக்குவரத்து | 100 | 60 | தொலைத்தொடர்புகள் | 75 | 30 |
| அரச மாற்றல்கள் | 15 | - | நாணயமல்லாத் தங்கம் | 5 | 55 |

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) வர்த்தக நிலுவை (01 புள்ளி)

(ஆ) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(இ) முதனிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(ஈ) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(v) மிதக்கும் நாணய மாற்றுவீத முறையின் கீழ் பின்வரும் உள்நாட்டுக் காரணிகள் எவ்வாறு நாணய மாற்றுவீதத்தைப் பாதிக்குமென விளக்குக.

(அ) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (02 புள்ளிகள்)

(ஆ) பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (02 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

**9.** (i) அபிவிருத்தியின் ஓர் அளவை என்ற வகையில் தலைக்குரிய வருமானம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது ? (04 புள்ளிகள்)

(ii) உலக வங்கியானது நாடுகளை அவற்றின் தலைக்குரிய வருமான மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வகைப்படுத்துகிறது ? (04 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சியும் பேண்தகு அபிவிருத்தியும் ஒன்றோடொன்று பொருந்தாத தன்மை கொண்டவையா ? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கை எந்தத் துறைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது ? (04 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மை வீதத்தைக் குறைவடையச் செய்வதில் பங்களிப்புச் செய்துள்ள முக்கிய காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

**10.** (i) "அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மூலாதாரங்கள் பெருமளவில் வர்த்தகம் சாராத உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் (domestic non-tradable economic activities) செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன." இந்நடவடிக்கைகளை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) "அண்மைய தசாப்தங்களில் இலங்கையில் பெண்கள் தொழிற்படை பங்குபற்றல் வீதம் சார்பளவில் கீழ்மட்டத்தில் தேங்கிய நிலையிலுள்ளது." தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றல் வீதம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை ? (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி வருவாய்கள் குறைவடைந்து வருவதற்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நடுத்தரகால அடிப்படையிலும் நீண்டகால அடிப்படையிலும் உயர் வளர்ச்சி வீதத்தை அடைவதற்கான தடைகளாக இலங்கைப் பொருளாதாரத்தில் காணக்கூடிய அடிப்படைப் பலவீனங்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

* * *

More Past Papers at tamilguru.lk